# யூதா
# ஓர் முகவுரை

உன்னதப்பாட்டு மட்டுமே யூதா புத்தகத்திற்கு எதிரானதாக மிக அதிகமாய் புறம்பாக்கப்பட்ட புத்தகமாகத் திருமறையில் காணுகிறது. வேத வசனப் புத்தகங்களில் ஒவ்வொன்றும் சமமான வலியுறுத்தலைக் கொண்டவை என்று தர்க்கிப்பது உறுதியற்றது என்ற போதிலும், ஒவ்வொன்றும் சில கருத்துக்களைக் கற்றுக் கொள்ள ஏதுவான சிறப்பைப் பெற்றுள்ளது. தேவன் தம்முடைய முன்னளிப்பின்படி யூதா புத்தகத்தை கவனமாக புதிய ஏற்பாட்டு புத்தகங்களின் வரிசையில் சேர்ப்பதை உறுதிப்படுத்தியிருந்தார். அதைக் காட்டிலும் வேறே காரணம் இருக்குமாயின், கிறிஸ்தவ சமுதாயம் அதற்குக் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. ஆகிலும், யூதா புத்தகம் சமய வாதத்துக்குரிய இலக்கியத்திலும் மேலான புத்தகமாக பொது நிருபங்களுக்கும் வெளிப்படுத்தின விசேஷத்துக்குமிடையே வைக்கப்பட்டது. இது கிறிஸ்தவர்கள் கேள்விப்பட வேண்டிய ஒரு செய்தியைக் கொண்டுள்ளது.

யூதா புத்தகத்தை வியாக்கியானப்படுத்துவதற்கான முதல் படி, திருமறையைச் சார்ந்த எந்த பதிவேடும், சம்பந்தப்பட்ட பதிவேடு எப்படித் தன்னைத்தான் வெளிப்படுத்துகிறது என்று கேட்டுக் கொள்ள வேண்டும். யூதா புத்தகம் எப்படிப்பட்ட எண்ணத்தைக் கொடுக்கிறது? அதன் ஆசிரியர் ஏன் தனது பேனாவை தாள்களில் பதியவைத்தார்? அவர் தனது வாசகர்களை உற்சாகப்படுத்த விரும்பினாரா? அவர்களுக்கு இன்னும் முழுமையான போதனையைக் கொடுக்க முற்பட்டாரா? அவர்களோடே ஒரு பொறுமையுடன் கூடிய நட்பை ஏற்படுத்த விரும்பினாரா? வரப்போகிற ஆபத்துக்களைக் குறித்து அவர் எச்சரிக்க விரும்பினாரா? இப்படிப்பட்ட கேள்விகளுக்கு இன்றைய கிறிஸ்தவர்கள் பதிலளிக்க திராணியுள்ளவர்களாயிருக்கிறார்கள், எனவே அவருடைய புரிந்து கொள்ளத் தக்க அளவீடும் வளரக் கூடும். இந்தப் பதிவேடு எழுதப்பட்டு இரண்டாயிரம் வருஷங்களுக்குப் பிறகு வாழ்ந்து கொண்டிருக்கிற போது, நிருபத்தை எழுதுவதற்கான சூழ்நிலைகளை திரும்பவும் கொண்டு வருவது அவ்வளவு எளிமையான பணியல்ல.

உறவுமுறையில் ஒரு வலிமையான அளவுக்கு மறு பெருக்கத்தை யூதா புத்தகத்தின் ஆசிரியருக்கும் அவருடைய நேரடி வாசகர்களுக்குமிடையே ஏற்படுத்த முடியும், அதினால் இன்றைய வாசகர்களும் நன்மையடைவார்கள். இதனால் தான் அவர்களது பிரயாசம் நியாயப்படுத்தப்படுகிறது. இன்றைய வாசகர்கள், மற்ற விஷயங்களோடு, யூதாவுக்கும் அவர்களுடைய வாசகர்களுக்குமிடையேயான உறவு எப்படி ஒன்றாக தக்க வைக்கப்பட்டுள்ளது என்று அறிய விரும்புகின்றனர். அது ஏன் தொடர்ந்தது? யூதா புத்தகத்தின் அமைப்புப் பற்றி அறிந்து கொள்வதன் மூலமும் அவருடைய வாசகர்களின் அந்தந்த நேரத்தைப் பொறுத்தும், இன்றைய வாசகர்கள் அந்த முதல் நூற்றாண்டு வாசகர்களைப் போலவே வாசிக்க முற்படுகின்றனர்.

வரலாற்று மற்றும் இலக்கிய ரீதியிலான காரியங்களை பரிசீலித்த பிறகு தான் இன்றைய வாசகர்கள் எப்படிப்பட்ட செய்தியை இந்த நிருபம் கிறிஸ்தவர்களின் சுய விசுவாசத்துக்கும் நடத்தைக்கும் அர்த்தத்தை அளித்தது என்று கேள்விகேட்கத் தோன்றும்.

## நிருபத்தின் நோக்கம்

அவர் எழுதிய வாசகர்களாகிய கிறிஸ்தவ சமுதாயத்தினர் தனிப்பட்ட சிலரால் மிரட்டப்பட்டனர். அவர்களைத்தான் ஆசிரியர் "தேவபக்தியற்றவர்களாகிய சிலர்" என்று சொன்னார் என்று முடிவுசெய்ய வழக்கமாக வாசகமுறையிலேயே யூதா புத்தகத்தை வாசிப்பதைக் காட்டிலும் மேலாக எதுவும் தேவையில்லை (யூதா 4). யூதா கண்டிப்பதில் மிகக் கடுமையாக இருந்தார். திருமறைச்சார்ந்த புத்தகங்களை வரிசை முறைப்படிப்படித்தால், அவருடைய வார்த்தைகள் உடனடியாக சில பக்கங்களைத் திரும்பி பார்க்கச் செய்யும். யூதா இந்த "தேவபக்தியற்ற நபர்களைப்" பற்றி சொன்னவைகள் அதிரடியாக பேதுரு "கள்ளப் போதகர்களைக்" குறித்து பேசினவைகளுக்கு ஒப்பாக இருந்தது (2 பேதுரு 2:1). இரண்டு ஆசிரியர்களுமே கிறிஸ்தவ சமுதாயத்தை உபத்திரவப்படுத்திக் கொண்டிருந்தவர்கள் உண்மையில் எவைகளைப் போதித்தார்கள் என்று விளக்கமாகச் சொல்லாவிட்டாலும். அதே கூட்டத்தார்களைத்தான் வியாக்கியானம் செய்தார்கள் என்று காணப்படுகிறது.

யூதா குறிப்பிடும் "பக்தியற்றவர்களாகிய நபர்கள்" பேதுரு குறிப்பிடும் "கள்ளப் போதகர்கள்" இவர்கள் கிறிஸ்தவர்களைத் தங்கள் சுய இலாபத்துக்காகப் பயன்படுத்திக் கொண்டார்கள் (யூதா 16; 2 பேதுரு 2:14), அவர்கள் அதிகாரத்தை அசட்டை பண்ணினார்கள் (யூதா 8; 2 பேதுரு 2:10). அவர்கள் ஒழுக்கமில்லாதவர்களாயிருந்தார்கள். அவர்கள் கிறிஸ்தவ உபதேசமானது கிறிஸ்தவ நடக்கைகளுடன் ஒன்றுக்கொன்று சார்ந்திருப்பதை மங்கலாக்கினர் (யூதா 12, 13, 18, 19; 2 பேதுரு 2:13, 14). அவர்கள் தேவதூதர்களுக்கு ஒப்பான நியாயத்தீர்ப்பை அடைவார்கள் (யூதா 6; 2 பேதுரு 2:4). ஒரே விதமான போதனைகள், ஒருவேளை அதே நபர்கள், பேதுரு தனது இரண்டாவது நிருபத்தை எழுதிய சபைகளையும் யூதா எழுதின சபைகளையும் ஆட்கொண்டன. அப்படியானபடியால், 2 பேதுருவை எழுதுவதற்கான நோக்கங்களே யூதாவையும் எழுத வைத்திருக்கக் கூடுமோ என வினாவத்தோன்றுகிறது. ஒரு ஆசிரியரை ஏவி எழுதின காரியங்கள் ஒருவேளை நல்லதொருப் புரிந்து கொள்ளுதலை உண்டாக்கினது போல மற்றொரு ஆசிரியரும் அதே நோக்கங்களுக்காக எழுதியிருக்கலாம்.

2 பேதுரு மற்றும் யூதா எழுதின நிருபங்கள் ஏதோ ஒரு வகையில் தெளிவாக இணைக்கப்பட்டுள்ளன. துப்பறிய ஏதுவாக நமக்கு இரண்டு உபதேசங்களைக் கொண்ட இரண்டு வசனப்பகுதிகள் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. அவைகள் இரண்டு அநேக விஷயங்களைப் பொதுவாகக் கொண்டுள்ளன என்பது ஒரு கூர்மையான உண்மை. சாட்சியங்கள் வரவிருந்தநிலையில், இரண்டின் ஆசிரியர்களும் ஒரே பகுதியில் வாழ்ந்து , ஒரேசமய காலத்தில் வாழ்ந்திருந்தால், மற்றும் அவர்கள் ஒருவரையொருவர் அறிந்திருந்தால் அது அவர்கள் அவைகளின் ஒற்றுமைகளை விவரிக்க நெடிய தூரம் போயிருக்கக் கூடும். அப்படிப்பட்ட சாத்தியக் கூறுகள் நினைத்துக்கூட பார்க்க

*இயலாதவை. சபையின் முதல் வருடங்களில், பேதுருவும் யூதாவும் எருசலேம் சபை காரியங்களில் மிக ஆழமாகத் தங்களை உட்படுத்தியிருந்தனர். இரண்டு நிருபங்களும் சபை தோன்றியபின் முதல் இருபது முப்பது வருடங்களில், எழுதப்பட்டவைகளாக தேதியிடப்பட்டால், ஒருவர் மற்றொருவருடைய ஊழியத்தை நன்கு அறிந்திருக்கக் கூடும். யூத கிறிஸ்தவம் வெளிப்படையாக யூதேயாவிலிருந்து விரிவடைந்து வந்த வேளையில், இரண்டு நிருபங்களும் அந்த ஆதி (சபை) காலத்தில் எழுதப்பட்டு வந்திருக்குமானால், இலக்கிய ரீதியாக ஒன்றுக்கொன்று விளக்கமளித்து இரண்டும் ஒப்புக் கொடுக்கப்பட்டிருக்கக் கூடும். இந்த நிருபங்கள் அதிகாரம் பெற்றவை என நாம் எடுத்துக் கொள்வதால் - 2 பேதுரு இந்த பெயர் கொண்ட அப்போஸ்தலனின் பெயரிலும் யூதா புத்தகம் யாக்கோபின் சகோதரனுடைய பெயரிலும் எழுதப்பட்டிருக்க வேண்டும், அவர்கள் கர்த்தருடைய சகோதரர்களானதால் - அவர்கள் எருசலேமில் வாழ்ந்து கொண்டிருந்தார்கள், அப்பொழுது அவரவர் நிருபத்தை எழுதினார்கள் என்று கருத்து தெரிவிக்கிறது.*

*இன்றைய வாசகர் யூதா மற்றும் 2 பேதுரு புத்தகங்களுக்கிடையேயான ஒற்றுமைகளை மாத்திரமல்ல, அவைகளின் வித்தியாசங்களையும் கூட காண விரும்பக் கூடும். நிருபங்களின் ஆராய்ச்சியில் சபைகளை மிரட்டிக்கொண்டிருந்தவர்கள் இரண்டு நிருபங்களிலும் பேசப்படுவோர் துல்லியமாகப் பார்த்தால் ஒரே கூட்டத்தார் அல்ல. மேலும், வித்தியாசமான சபைகளுக்கு ஒவ்வொரு ஆசிரியரும் முகமுகமாய் காணப்பட்டவர்களுமாகவோ அல்லது நற்பெயர் பெற்றவர்களாகவோ இருந்திருக்கக் கூடும். இப்படியாக இரண்டு ஆசிரியர்களும் வித்தியாசப்பட்ட எல்லைக்குரிய செல்வாக்கு உடையோராயிருந்தனர். பேதுரு இன்னும் அதிக ஆழமாக பதிவேற்படுத்தும் வகையில் சில சபைகளுக்கும் யூதா வேறு சில சபைகளுக்கும் எழுதமுடிந்தது. நிருபங்களின் இரண்டு ஆசிரியர்களும் எழுதும் போது கள்ளப் போதகர்கள் தங்கள் செல்வாக்கை முயற்சியுடன் ஈடுபடுத்தியிருந்ததன் விளைவால் ஏற்பட்ட சூழ்நிலையினால் நிருபங்கள் ஒன்றாகவே இருந்தன. இருந்தாலும், கனிசமான அளவில் 2 பேதுருவிலும் யூதாவிலும் குறிப்பிட்டுள்ளபடி பொதுவான ஆபத்துக்குரிய காரியங்களை சபைகள் சந்தித்தன. அவைகள், பொதுவான நிருபம் போதிய வித்தியாசங்களுடன் சபைகளால் சந்திக்கப்பட்ட சூழ்நிலைகளுக்கேற்ப எழுதப்பட்டதாக கருதும் நிலைக்கு சென்று விடக் கூடாது.*

*இரண்டு ஆசிரியர்களுமே அவரவர் சேவை செய்த சபைகளில் (காட்சியில் தோன்றும் புதிய வருகையாளர்கள்) போதகர்கள் அப்போஸ்தலிக செய்திகளோடு ஒத்துப் போக முயற்சித்த போது அந்தப் போதகர்கள் கிறிஸ்தவ சமுதாயங்களுக்கும் அவர்கள் ஊழியஞ்செய்த கர்த்தருக்குமிடையே வரையறைகளை வைத்தனர் என்பதை அந்தந்த சபையார் அறிந்து கொள்ள வேண்டும் என்று இரண்டு ஆசிரியர்களுமே விரும்பினர் (யூதா 20, 21; 2 பேதுரு 2:20, 21). கள்ளப் போதகர்களை விவரித்த போது பேதுருவோ யூதாவோ நயவசனிப்புடன் வார்த்தைகளைப் பயன்படுத்தவில்லை. அவர்கள் தங்கள் வழிகளை எந்தவிதமாக முன் வைத்தபோதிலும் சபைகளைத் துன்பப்படுத்தினோர் காட்டு மிருகங்களைக் காட்டிலும் சிறந்தவர்களாக இருக்கவில்லை (2 பேதுரு 2:12), ஏனெனில் "அவர்களுக்காக காரிருளே*

*என்றென்றைக்கும் வைக்கப்பட்டிருக்கிறது" (யூதா 13). இரண்டு நிருபங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ள போதகர்கள் ஒரே வித வண்ணந் தீட்டப்பட்டவர்கள் தான் என்பது போதியஅளவு தெளிவுள்ளதாயிருக்கிறது.*

*2 பேதுரு புத்தகமும் யூதாவும் மறுக்க ஏதுமில்லாத அளவுக்கு ஒரே அமைப்பை பெற்றவை என்ற நிலையில், ஒவ்வொரு நிருபமும் அதனதன் சுய நோக்கத்தையும் வழிமுறைகளையும் கொண்டுள்ளது, யூதாவைக் காட்டிலும் அதிகமாக, பேதுரு, கள்ளப் போதகர்கள் தங்கள் அறிவு அப்போஸ்தலர்களின் சாட்சியத்தைக் காட்டிலும் மேலானவைகள் என்ற கோரிக்கையைக் குறித்து அக்கறை காட்டினார் (2 பேதுரு 1:3, 8). ஒரு வகையில் மிகவும் அதிகமாய் உணரப்பட்ட இறுதிக் காரியங்களைக் குறித்த கோட்பாடு கர்த்தருடைய மறு வருகையை கள்ளப் போதகர்கள் மறுதலிக்கச் செய்திருக்க வேண்டும் (2 பேதுரு 3:3-10). யூதா தனது பகுதியில், தனது கூட்ட ஜனங்கள் வெகு நாட்களாக மரியாதை செலுத்தி வந்த யூத இலக்கியங்களை முன் நிறுத்தி தேவ பக்தியற்ற கோரிக்கைகளுக்கு எதிர்த்து நிற்கவும் சபைகளில் குழப்பங்களை ஏற்படுத்தி தன்னைச் சார்ந்தவர்களையும் குழப்பமடையச் செய்து கொண்டிருந்தவர்களை எதிர்க்கவும் செய்தார். ஒவ்வொரு நிருபமும் அதன் முத்திரைகளைக் கொண்டிருக்கிறது.*

*பேதுரு மற்றும் யூதா ஆகிய இருவருமே தங்கள் வாசகர்களிடம் அவர்களுடைய முதல் போதகர்கள் அப்போஸ்தலிக விசுவாசத்தை நிறைவாக அடையக் கூடிய தன்மையுடையோராயிருந்தனர் என்பதை நினைப்பூட்டினர் (யூதா 3; 2 பேதுரு 1:3). முரண்பாடுகளுக்கு உரிய கோரிக்கைகளுக்குப் பதிலாக, அவர்களுடைய சத்தியத்தின் அறிவு குறைவாயிருக்கவில்லை. இருவருமே அவரவர் கூட்ட ஜனங்களுக்கு வேண்டுகோளாக அழிவுக் கேதுவான மார்க்க விரோத செயல்களின் அறிமுகத்தையே புறக்கணிக்கும்படி கூறினர் (யூதா 4; 2 பேதுரு 2:1). அது அவர்கள் "பரிசுத்தவான்களுக்கு ஒருமுறை ஒப்புவிக்கப்பட்ட விசுவாசத்திற்காக தைரியமாய் போராட வேண்டியவர்கள்" என்பது அவசியமானதாயிருந்தது (யூதா 3).*

## *எழுதப்பட்ட கூட்டத்தார்*

*யூதா தனது நிருபத்தை பொதுவான பதத்தில் "பிதாவாகிய தேவனாலே பரிசுத்தமாக்கப்பட்டவர்களும், இயேசு கிறிஸ்துவினாலே காக்கப்பட்டவர்களுமாகிய அழைக்கப்பட்டவர்களுக்கு எழுதுகிறதாவது:" என்று எழுதின நிலையில் (யூதா 1), அவர் சொல்லுகிற விளக்கத்தில் கள்ளப்போதகர்களுக்கு குறிப்பிடும் விதத்தைப் பார்க்கும் போது, அவர் கிறிஸ்தவத்திற்கென எந்த நிருபத்தையும் பொதுவாக எழுதவில்லை என்று ஆலோசனை கொடுக்கிறது. ஒரு குறிப்பிட்ட கூட்ட ஜனங்களை மனதில் கொண்டே எழுதியிருக்கிறார். அதற்கான ஒரு குறிப்பு அவர் குறிப்பிடும் ஏவப்படாத யூதர்களின் தள்ளுபடியாகம எழுத்துக்கள். அவர் யூதர்களின் விசுவாசிகளான கூட்டத்தையே எதிர்பார்த்திருந்தார் என்பது வெளிப்படை. புறஜாதி விசுவாசிகள் எத்தியோப்பியாவின் ஏனோக்கையோ அல்லது மோசேயின் சங்கற்பம் பற்றியோ பரிச்சயமில்லாதவர்களாயிருந்திருக்கக் கூடும், அவை யூதா மேற்கோள் காட்டிய தள்ளுபடியாகம எழுத்துக்கள்.*

*2 பேதுருவும் யூதாவும் எழுதிய மூல கூட்டத்தார்கள் இரு*

கூட்டமுமே, ஒருவருக்கொருவர் நெருங்கிய அடுத்தடுத்த பூகோளப்பகுதியில் வாழ்ந்தவர்கள் என்று கருத்துத் தெரிவிக்கிறது. அதன் பகுதியாக, விளக்கிக் கூறுவது என்னவெனில், இலக்கிய ரீதியாகவும் ஒன்றுக்கொன்று இணைவுள்ள நிருபங்களாக ஒரே மாதிரியான அக்கறையுடன் எழுதப்பட்டிருப்பதைக் கூறுகிறது. யூதாவும் 2 பேதுருவும், அதே போல யாக்கோபும், ஒரே காலக்கட்டங்களுக்குள் எழுதப்பட்டவை, அது சபையின் ஜீவியத்தில் ஆரம்பக்கட்டம், புறஜாதிகள் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் வராத நேரம். யூதாவின் திறப்பு வார்த்தைகள் தனக்கும் தன்னுடைய வாசகர்களுக்குமிடையேயுள்ள தொடர்பைக் காட்டுகிறது. அவர், "உங்களுக்கு எழுதும்படி நான் மிகவும் கருத்துள்ளவனாயிருக்கையில்" என்று எழுதினார். பிறகு குறிப்பிடுகையில், "விசுவாசத்திற்காக நீங்கள் தைரியமாய்ப் போராடவேண்டுமென்று உங்களுக்கு எழுதி உணர்த்துவது எனக்கு அவசியமாய்க் கண்டது" என்றும் எழுதினார் (யூதா 3). "உங்களுக்கு" மற்றும் "நான்" அல்லது "எனக்கு" ஆகிய பிரதிப்பெயர்ச்சொற்கள் பொதுவானவை. ஒரு பொதுவான கூட்டத்துக்கு யூதா எழுதினார் என்பதில் சிறிதளவு அர்த்தமே காணுகிறது.

## நிருபத்தின் ஆசிரியர்

இந்த நிருபத்தின் ஆசிரியர் தன்னைத்தானே அறிமுகப்படுத்தி, "இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரனும், யாக்கோபினுடைய சகோதரனுமாயிருக்கிற யூதா" என்று எழுதுகிறார் (யூதா 1). அறிமுக வாக்கியம் இன்றைய வாசகர்களுக்கு திருப்தி அளிக்கத்தக்க தெளிவான காட்சியாக போதியளவு இல்லாத நிலையில் (யூதா என்பது யூதர்கள் வட்டத்தில் ஒரு பொதுவான பெயர்), எழுத்தாளர் தன்னை தனது முதல் வாசகர்களுக்குப் போதிய அடையாளத்தைக் கொடுத்திருப்பதாக நினைத்திருக்கக் கூடும் என்றே தோன்றுகிறது. ஆதிசபையில், குறைந்த பட்சம் யூதக் கிறிஸ்தவர்கள் கூடிவந்த சபைகளில் யாக்கோபு நிருபத்தை எழுதின அதே நபர்தான், அதாவது கர்த்தருடைய சகோதரன்தான் என்பதை மனதில் கொண்டு வந்திருக்கக் கூடும். யாக்கோபு நன்கு அறியப்பட்டவராயிருந்தபடியால், யூதாவை எழுதின ஆசிரியர் தன்னை அடையாளப்படுத்த தன்னுடைய சகோதரனின் அதிகாரத்தையும் பெயரையும் பயன்படுத்தினார். மாற்கு 6:3ல், இயேசுவின் சகோதரனும் யாக்கோபுக்கும் சகோதரனாகிய யூதா, ஆங்கிலத்தில் யூதாஸ் என்றழைக்கப்படுகிறார். யூதா என்பது யூதாஸின் சுருக்கப் பெயர். மாற்கு 6:3ல் அவர் சகோதரர்கள் வரிசையில் மூன்றாவதாகவும், மத்தேயு 13:55ன் வரிசையில் நான்காவதாகவும் குறிப்பிடப்படுகிறார். இயேசுவின் குடும்பத்தோடு தொடர்புடைய எவருக்கும், யாக்கோபின் சகோதரன் என்ற அடையாளமாக யூதா கொடுப்பதன் மூலம் அதுவே போதுமானதாயிருக்கக் கூடும்.

லூக்கா தனது இரண்டாம் பிரபந்தத்தை (அப்போஸ்தலர்களின் நடபடிகளை) அறிமுகப்படுத்தியுள்ளதில், சபையின் ஸ்தாபிதம் மற்றும் வளர்ச்சி குறித்து அந்தப்பிரபந்தம் பேசுகிறது, இதே புத்தகத்தில் லூக்கா இயேசுவின் சகோதரர்கள் விசுவாசிகளாக மாறின காரியங்களை குறிப்பால் தெரிவிக்கிறார். இயேசு பரமேறிச் சென்றபின், இயேசுவின் சகோதரர்கள் அப்போஸ்தலர்களோடும் மற்றவர்களோடும் எருசலேமில்

ஓர் மேல்வீட்டறையில் கூடிவந்திருந்தார்கள் (நடபடிகள் 1:14), இதில் உய்த்துணரும் காரியம் என்னவெனில் அந்த வேளையில் அவர்கள் தங்களுடைய சகோதரனே தங்களுக்கும் ஆண்டவராயிருக்கிறார், அவர் இஸ்ரவேலின் மேசியா என்று விசுவாசிக்கத் துவங்கினார்கள் என்பது தான். லூக்கா தனது கதையை வெளிப்படுத்தின போது, அவர் இயேசுவின் சகோதரரில் ஒருவனாகிய யாக்கோபு, எருசலேம் சபையில் ஒரு முன்னோடியாக மாறினார் என்பதை, அவர் தெளிவாக்கினார். யாக்கோபு எருசலேமில் நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்றார் (நடபடிகள் 15:13-21), பின்னர் புத்தகத்தின் பின்பகுதியில் பங்கு பெற்றார் (நடபடிகள் 21:18; காண்க 1 கொரிந்தியர் 15:7; கலாத்தியர் 1:19; 2:9, 12). அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில் கர்த்தருடைய மற்ற சகோதரர்களைக் குறித்து எந்தத் தகவலும் இல்லை.

சில வருடங்கள் கழித்து பவுல் தனது சுவிசேஷப் பயணத்தைத் தொடங்கின போது, அவர் 1 கொரிந்தியர் புத்தகத்தை (கி. பி. 57 வாக்கில்) எழுதினார். இந்த நிருபம் இயேசுவின் சகோதரர்களில், யூதாவும் ஒருவராக, உடன் பயணித்த சுவிசேஷகர்களாக இருந்துள்ளனர் என்று சுட்டிக் காட்டுகிறது (1 கொரிந்தியர் 9:5). அவர் பெயர் கொண்ட நிருபத்துக்கு வெளியே, யாக்கோபின் சகோதரனாகிய யூதாவைப் பற்றி நாம் அறிந்து கொள்வது எல்லாம் அவ்வளவுதான். பிற தகவல்கள் இல்லாத நிலையில், யூதா புத்தகத்தை எழுதின ஆசிரியர் யோசேப்பு மரியாள் ஆகியோரின் மகனும், யாக்கோபின் சகோதரனும், இயேசுவின் ஒன்றுவிட்ட சகோதரனுமாகிய யூதா தான் என்ற முடிவுக்கு வருவதே நியாயமானது. இந்த முடிவு வாக்குவாதத்திற்கு உரியதாயிருக்கிறது, ஆகிலும் எந்த ஆட்சேபனையும் எதிரானதும் மேற்கொள்ள கூடாததுமாகும்.

## யூதா புத்தகம் எழுதப்பட்ட காலமும் 2 பேதுருவுடனான அதன் தொடர்பும்

யூதா தனது நிருபத்தை எழுதின தேதி நிச்சயமாகத் தெரியவில்லை, நிருபத்தில் உள்ள வசனங்களில் எழுதப்பட்ட காலத்திற்கான குறிப்பு எதுவுமில்லை. பூகோள ரீதியான இடமோ அல்லது வரலாற்று நிகழ்ச்சிகளோ எதுவும் குறிப்பிடப்பட வில்லை. ஒரு குறிப்பிட்ட அளவுக்கு யூதா புத்தகம் எழுதப்பட்ட காலம் 2 பேதுரு புத்தகத்தையே ஆதாரத் தொடர்பாகக் கொண்டுள்ளது.

யூதாவையும் 2 பேதுருவையும் ஒப்பிடும் போது, இரண்டு எழுத்துக்களுக்கு மிடையே சில இலக்கிய ரீதியிலான தொடர்பு இருப்பது தெரிகிறது - அதாவது, இருவரில் ஒரு ஆசிரியர் மற்றவர் எழுதின நிருபத்தை அறிந்து பயன்படுத்தியிருக்கிறார் என்பது தெளிவு. மாறிமாறி ஒருவருக்கொருவர் (இருவருமே) பொதுவான மூலக்கருத்தைப் பயன்படுத்தியிருக்கக் கூடும். எந்த வகையிலும், ஆசிரியர்கள் இருவருமே கொடுக்கிற விளக்கத்தைக் காணும் போது அவர்கள் வெளிப்படையாக போதகர்களை பழித்துரைத்தல் திடீரென தோன்றாத ஒரே மாதிரியான கருத்தைக் கொண்டுள்ளன. யூதாவில் சொல்லப்படும் இருபத்தைந்து வசனங்களில், பதினைந்து காரியங்கள் 2 பேதுருவில் சமமாகச் சொல்லப்பட்டுள்ளன. கூடுதலாக, இரண்டு ஆசிரியர்களும்

| பேதுரு விளக்கங்களை வரிசைக் கிரமமாக எழுதினார், யூதா அப்படிச் செய்யவில்லை | |
|---|---|
| யூதா | 2 பேதுரு |
| 1. வானந்திரத்தில் இஸ்ரவேலர் (வசனம் 5) | 1. - |
| 2. பாவஞ்செய்த தூதர்கள் (வசனம் 6) | 2. பாவஞ்செய்த தூதர்கள் (2:4 ) |
| 3. - | 3. நோவா (2:5) |
| 4. சோதோம், கொமோரா (வசனம் 7) | 4. சோதோம், கொமோரா (2:6) |
| 5. - | 5. லோத்து (2:7, 8) |
| 6. மோசே (வசனம் 9) | 6. - |
| 7. காயீன் (வசனம் 11) | 7. - |
| 8. பிலேயாம் (வசனம் 11) | 8. பிலேயாம் (2:15, 16) |
| 9. கோராகு (வசனம் 11) | 9. - |
| 10. ஏனோக்கு (வசனம் 14) | 10. - |

ஒரே மாதிரியான விளக்கத்தையும் கருத்துக்களையும் அந்தப் போதகர்களை பழித்துரைக்கும் வகையில் பயன்படுத்துகின்றனர். இருவருமே அவர்களை ஒரே மாதிரியான வரிசைப்படுத்துதலையும் கொண்டுள்ளனர். சபைக்கு இருக்கும் மிரட்டல்களையும் ஒரே மாதிரியாகக் கண்டு எழுதியுள்ளனர். கடந்த காலங்களில், கீழ்ப்படியாதவர்களை தேவன் நியாயந்தீர்த்ததைப் போல கள்ளப் போதகர்களையும் நியாயந்தீர்ப்பார் என்று இருவருமே வாதிட்டனர், இருவருமே தங்களுடைய செய்திகளுக்கு ஆதரவாக தேவதூதர்களையும் அங்கிருந்து ஒப்பிட்டுக் காட்டுதல் தொடருகிறது. 2 பேதுருவுக்கும் யூதா நிருபத்துக்கும் இடையே இலக்கிய ரீதியிலான தொடர்பு இருக்கிறது என்பது வல்லுனர்களால் அரிதாகவே கேள்வி எழுப்பப்படுகிறது. சோதோம் கொமோராவையும் தேவன் நியாயந்தீர்த்ததையும் பயன்படுத்தினர்.

அநேக வருடங்களாக திருமறை மாணவர்கள் 2 பேதுரு புத்தகம் முதலில் எழுதப்பட்டதாகவும் யூதா அவற்றிலிருந்து சில வார்த்தைகளை கைக் கொண்டு தனது சுய நோக்கத்தினிமித்தம் சில விளக்கங்களையும் பயன்படுத்தினார் என்றும் வாதிடுகின்றனர். ஒரு நல்ல காரணத்தையும் அதற்குக் காட்டலாம். 2 பேதுருவை யூதா பயன்படுத்தினார் என்று நினைப்பவர்கள் தங்கள் காரணங்களை இரண்டு அடிப்படைக்கொள்கைகளில் உறுதிப்படுத்துகின்றனர்: (1) யூதா தான் எழுதினவைகளுக்கு தாங்கும் ஆதாரமாக அப்போஸ்தலர்களின் ஆதரவைக் கோருவதாகக் காணப்படுகிறது (வசனங்கள் 17, 18). “அப்போஸ்தலர்கள்” என்று வசனம் 17ல் குறிப்பிடப்படுவது, 2 பேதுருவைத்தான் சுட்டிக்காட்டுகிறது. என்று விவாதிக்கப்படுகிறது. யூதா இரகசியமாக தான் பேதுருவின் வார்த்தைகளை நம்பிச்சார்ந்திருப்பதைக் குறிப்பிட்டார். (2) பேதுரு, யூதாவைக் காட்டிலும் சபையிலே முதன்மைத்துவமுள்ளராயிருந்தார், கூடுதலாக கிறிஸ்துவுக்கு அப்போஸ்தலனாகவும் இருந்தார், எனவே பேதுருவின் வார்த்தைகளை யூதா பயன்படுத்தியிருக்கிறார் என்பதை விட யூதாதான் பேதுருவின்

## யூதா மற்றம் 2 பேதுரு ஒப்பீடுகள்

| யூதா | | 2 பேதுரு |
|---|---|---|
| 4 | கள்ளப் போதகர்கள் எஜமானை மறுதலித்தல் | 2:1 |
| 4 | அவர்களுடைய ஆக்கினை பூர்வகாலத்தில் தீர்மானிக்கப்பட்டது | 2:3 |
| 6 | பாவஞ் செய்த தூதர்கள் நியாயத்தீர்ப்பு நாள் வரைக்கும் காக்கப்பட்டிருக்கிறார்கள் | 2:4 |
| 7 | சோதோம் கொமோரா நியாயந்தீர்க்கப்படுதலுக்கு ஒரு முன்னு தாரணம் | 2:6 |
| 8 | இந்த மனுஷர்கள் மாம்சத்தை அசுசிபடுத்திக் கொண்டு கர்த்தத்துவத்தை அசட்டை பண்ணினார்கள் | 2:10 |
| 9 | தேவ தூதர்கள் மற்றவர்களைக் குற்றப் படுத்தமாட்டார்கள் | 2:11 |
| 10 | தங்களுக்குத் தெரியாதவைகளை தூஷிக்கிறார்கள் | 2:12 |
| 10 | புத்தியில்லாத மிருகங்களைப் போலிருக்கிறார்கள் | 2:12 |
| 11 | பிலேயாமின் பாவங்களில் நடக்கிறார்கள் | 2:15 |
| 12 | இவர்கள் தண்ணீரில்லாத மேகங்கள் | 2:13 |
| 12 | அன்பின் விருந்துகளில் கறைகளாயிருக்கிறார்கள் | 2:17 |
| 13 | இவர்களுக்கு என்றென்றைக்கும் காரிருளே வைக்கப்பட்டிருக்கிறது. | 2:17 |
| 16 | தங்கள் இச்சைகளின்படி நடந்து இறுமாப்பாய்ப் பேசுகிறார்கள் | 2:18 |
| 17 | அப்போஸ்தலரால் சொல்லப்பட்ட வார்த்தைகளை நினைவுகூருங்கள் | 3:2 |
| 18 | கடைசி நாட்களில் துன்மாக்கமான இச்சைகளிலே நடக்கிற பரியாசக்காரர் தோன்றுவார்கள் | 3:3 |

வார்த்தைதளைப் பயன்படுத்தினார் என்பதே சரியானதாய் இருக்கக் கூடும்.

மிக சமீபத்தில், நிருபங்களுக்கிடையேயான இலக்கியத்தொடர்பு ஆய்வில், வல்லுனர்கள் 2 பேதுரு புத்தகம்தான், ஒரு பகுதி யூதாவின் வார்த்தைகளை வாங்கி எழுதப்பட்டுள்ளது என்பது மாற்றுக் கருத்துக்கு அப்பாற்பட்டது என்று தர்க்கம் செய்தனர். ஒரு காரியம், யூதா 2 பேதுரு நிருபத்தை ஒரு மூலக்கூறாக பெற்று பயன்படுத்தியிருந்தால் அது ஏன் சாராம்ஸமாகக் கொடுக்கப்பட வேண்டும் என்ற புரிந்துகொள்வது கடினமாயிருக்கிறது. யூதா தன் நிருபத்தில் 2 பேதுருவில் உள்ளதை சுருக்கிக் கூறினார் என்பதைக் காட்டிலும், பேதுருதான் யூதாவிலுள்ளதை விரிவாக்கினார் என்பதாக விவாதம் தொடர்கிறது. கூடுதலாக, இரண்டு நிருபங்களின் கிரேக்க வசனப்பகுதி அழகாக மூலப் பிரதிகளின் வார்த்தைக்கு வார்த்தை ஒப்பிட்டுப் பார்க்கப்படுகிறது. அது மிகப் பெரிய அளவிலான பொருளுக்குரிய தீர்ப்புக்கு அழைக்கிறது, இருப்பினும், வல்லுனர்களின் விளக்கவுரைகளின் பார்வையில் யூதாவே முதலாவதாக

எழுதப்பட்டது என்ற கருத்து மேற்கொள்கிறது[1] சிலர் 2 பேதுருவின் புத்தகமும் யூதாவும் ஏதோ ஒரு மூன்றாவது மூலக் கருத்திலிருந்து பெறப்பட்டவை என்ற தர்க்கத்தை முன்வைக்கின்றனர், இருந்தாலும் அதற்குரிய சாத்தியக் கூறுகள் மறுப்புத் தெரிவிக்க முடியாத வகையிலிருக்கிறது.

யாக்கோபின் சகோதரனாகிய யூதா, தனது பெயரைக் கொண்ட புத்தகத்தின் ஆசிரியர் என யூதாவுக்கு மறுப்புத் தெரிவிப்போர்தான், வழக்கமாக 2 பேதுருவின் புத்தகத்திற்கும் பேதுருவை ஆசிரியராக மறுப்பு தெரிவிக்கின்றனர். இரண்டு நிருபங்களிலும் மறை ஞான தத்துவப் போதகர்களாகத் தங்களை கூறிக் கொள்வோரைப் பார்த்து, அதிக எண்ணிக்கையுள்ள வேத வல்லுனர்கள் இரண்டு நிருபங்களுமே முதல் நூற்றாண்டின் பின்பகுதியிலோ அல்லது இரண்டாவது நூற்றாண்டின் முன் பகுதியிலோ எழுதப்பட்டிருக்கக் கூடும் என்று கூறுகின்றனர், இருப்பினும், அதிகமதிகமான வல்லுனர்கள் யூதா அல்லது பேதுரு நிருபங்களிலுமே மறை ஞான தத்துவப் போதகங்கள் இல்லையென்று கண்டறிந்து உள்ளனர். “அறிவு” *(gnosis)* எனும் வார்த்தை மட்டுமே Gnosticism என்னும் மறை ஞான தத்துவக் கோட்பாடுகளை கண்டிப்பதற்கு போதுமானதல்ல. உதாரணமாக, மறைபொருள் ஞானக் கோட்பாடு மனம் உடல் என இருவேறு பொருள் எனும் கொள்கையுடன் கூடிய சாராம்ஸத் தொகுப்பைக் கொண்டது. மனம் உடல் இருவேறு பகுதியென்ற கோட்பாடு என்பது பருப்பொருள் மற்றும் ஆவி இரண்டிற்குமிடையே ஒரு கூர்மையான வித்தியாசத்தை ஏற்படுத்துகிறது. சரீரக்காரியங்கள் தீமையான தன்மையுடையவை என்ற கோணத்தில் பார்க்கப்படுகிறது, ஆவியோ நன்மையான தன்மையுடையவையாகக் காணப்படுகிறது. 2 பேதுருவிலோ யூதாவிலோ எவ்வித இருவேறு பொருள் கோட்பாடு பற்றிய ஆதாரம் எதுவுமில்லை. பழங்கால கிரேக்க நாட்டுப் பண்பாடோ எவ்வித தர்க்கத்துக்கும் இடமின்றி 2 பேதுரு நிருபம் பேதுருவின் மரணத்துக்குப் பின்புதான் எழுதப்பட்டது என்றும், மறையியல் ஞான கோட்பாடு சபைகளில் சொல்வாக்கு பெற்றிருந்தது என்றும் தர்க்கம் செய்வதில்லை.

ஒரு சப்தமில்லாத யூகம் கொண்ட சிலர் 2 பேதுருவுக்கும் யூதாவுக்குமிடையில் இலக்கியத்தொடர்பு இருப்பதாகச் சொல்லி இரண்டு நிருபங்களும் அநேக ஆண்டு இடைவெளியில் பிரிக்கப்பட்டு ஒருவேளை பல தசம (பத்து) ஆண்டுகள் கூட ஆகியிருக்கலாம் என்கின்றனர். யூதா புத்தகம் யூதக் கிறிஸ்தவர்களுக்கு எழுதப்பட்டது[2] என்றும் 2 பேதுரு புற ஜாதி கிறிஸ்தவர்களுக்கு எழுதப்பட்டது[3] என்றும் சொல்லுவதுண்டு. இது உண்மையானால், 2 பேதுருவை எழுதின நபருக்கோ நபர்களுக்கோ யூதா நிருபத்தை விநியோகிக்கத் தேவையான கால அவகாசம் தேவைப்பட்டிருக்கும். 2 பேதுருவை எழுதினவர் ஒரு கற்பனைப் பெயரையுடைய ஆசிரியர் எனில் அது குறித்த தர்க்கம் உறுதியானது, மேலும் எழுதப்பட்ட நிருபங்களுக்கு இடையே கால அளவு நீடித்திருந்தாலும் தர்க்கம் உறுதியானதே. ஆகிலும் அந்த முடிவுகள் பழித்துப் பேசுதலுக்கு அப்பாற்பட்டது; இரண்டுமே வினயமான சவாலுக்கு திறந்து விடப்பட்டுள்ளது.

2 பேதுரு மற்றும் யூதா ஆகிய இரண்டுக்குமிடையே எழுதப்பட்ட கால இடைவெளி அதன் இலக்கியத் தொடர்பு பற்றிய சார்பு தன்மையை

சரியென ஏற்றுக் கொள்வது அவசியம் என தோன்றவில்லை. அவைகளின் ஒற்றுமைகள் அவை ஒரே நேரத்தில் எழுதப்பட்டதற்கு சான்று என ஒருவர் தர்க்கிக்கலாம். நிருபங்களின் ஆசிரியர்கள் இருவரும் எருசலேமில் இருந்தபோது எழுதப்பட்டது என்பது உண்மையானால், அந்த வேளையில் எருசலேமிலிருந்த யூதசபையில் மாத்திரமல்ல சுற்றுப் புறங்களில் இருந்த சபைகளிலுங்கூட அவர்கள் முன்னோடிகளாய் செயலாற்றிக் கொண்டிருந்த போது, எப்படி ஒருவர் எழுதிய வார்த்தைகளை மற்றொருவர் தெரிவு செய்திருக்கக் கூடும் என புரிந்து கொள்வது கடினமல்ல. வேறு காரணம் இல்லாதிருக்குமானால், அப்படிப்பட்ட செயல்கள் எழுத்தாளர்களுக்கு மறுவேகம் கொடுத்து இருவரையும் எழுத அதிகாரம் கொடுத்திருக்கும். எந்த நிருபம் முந்தி வந்தது என்பது கடைசியில் ஒரு சிறிய விளைவு முக்கியத்துவம் மட்டுமே. நிருபங்கள் எழுதப்பட்ட தேதி (வருடம்) பற்றி நாம் நிச்சயமாக அறிந்திராவிட்டாலும் அவர்கள், யாக்கோபைப் போல், சிதறிப் போயிருந்த யூதக் கிறிஸ்தவர்களுக்கு அதன் ஆரம்பக் கட்டத்தில் எழுதியிருப்பதால், அவைகளின் ஒற்றுமைகளைப்பற்றி புரிந்து கொள்வது மிகவும் கடினமல்ல. சிறந்த சாட்சியங்கள் இல்லாத நிலையில், இரண்டு நிருபங்களும் சபை வரலாற்றின் துவக்க காலத்தில் முதல் இரண்டு தசம வருடங்களின் முடிவில் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்று நாம் கருத்துத் தெரிவிக்கிறோம். அப்படிப்பட்ட நிலை நம்பத்தகுந்தது என்பது ஆதிசபையைக் குறித்து நாம் அறிந்திருப்பவைகளிலிருந்து தெளிவாகிறது.

அப்போஸ்தலர் நடபடிகளின் சாட்சியங்களின்படி சபையின் ஆரம்ப வருடங்களில் யூதேயாவை ஒட்டிய யூதர்களின் சமுதாயங்களில் அது வேகமாக பரவியுள்ளது தெளிவாகக் காணப்படுகிறது. கிறிஸ்தவர்களை பிடித்து அழிக்க சவுல் மேற்கொண்ட தமஸ்கு பயணம் மூலம் கிரேக்கம் பேசும் யூதர்கள் மத்தியில் துவக்க நாட்களில் பலஸ்தீனாவின் சுற்றுப்புறங்களில் கிறிஸ்தவம் வெகுவாக பரம்பிற்று என்பது தெளிவாகிறது (நடபடிகள் 9:1, 2). கலாத்தியர் 2:1ன் கணக்குப்படி பதினான்கு வருட இடைவெளி என்பது கிறிஸ்துவின் மரணத்திலிருந்து ஐந்து ஆண்டுகளுக்குள் பவுல் மனமாற்றப்பட்டிருக்க வேண்டும் என்று நாம் கணக்கிடவேண்டும். இதன் பொருள், சிலுவை நிகழ்ச்சியின் ஐந்து வருடங்களுக்குள், கிறிஸ்தவ விசுவாசத்தைப் பற்றிக் கொண்ட தமஸ்குவின் யூதர்களின் அதிகமான எண்ணிக்கையினால் எருசலேமிலிருந்த அதிகாரிகளின் கவனத்திற்குப் போயிற்று என்பதாகும். கூடுதலாக, கிறிஸ்தவத்தின் பரவுதலுக்கான சாட்சியம் யூதர்களின் சுற்றுப்புறங்களில் பரவியது என்பதற்கான ஆதாரமாக எருசலேமிலிருந்த யூத விசுவாசிகள் சிதறிப் போன சம்பவங்களின் அறிக்கைகள் மூலம் வெளிப்படுத்துகின்றன, ஸ்தேவானுடைய மரணத்துக்குப் பின்பு சிதறிப்போனவர்கள் அந்தியோகியாவின் பகுதிகளில் புறஜாதிகளுக்கும் பிரசங்கித்தார்கள், யூத சமுதாயங்களுக்குள்ளும் கூட செய்தி சென்றடைந்தது என்பது தெளிவாகத் தெரிகிறது (நடபடிகள் 11:19, 20).

இயேசு சிலுவையிறையப்பட்ட அடுத்த முதல் இரண்டு தசம வருடங்களில் யூத கிறிஸ்தவர்கள் யூதருடைய அநேக ஜெப ஆலயங்களில் குறிப்பிடத்தக்க கருவிகளாக வடக்கிலிருந்து தெற்கு வரையிலான சுற்றுப்புறங்கள் மற்றும் அந்தியோகியா மற்றும் தமஸ்கு பகுதிகளில் செயல்பட்டனர். என்று

கூறுவது பாதுகாப்பான முடிவாயிருக்கிறது. மேலும், எவ்வித சவாலுமின்றி கிறிஸ்தவ செய்தி இந்தப் பகுதியில் பரவ எருசலேமிலிருந்த அதிகாரிகள் அனுமதித்தனர். கிறிஸ்தவ செய்தி சீரியா மற்றும் வடயூதேயாவிலிருந்த அநேக ஜெப ஆலயங்களில் குழப்பத்தைக் கொண்டு வந்தது. சவுல்மட்டுமே கிறிஸ்தவ செய்தி பரவுவதைத் தடுக்க யூத அதிகாரிகளால் அனுப்பப்பட்டவரல்ல என்று ஒருவர் சந்தேகிக்கக் கூடும். மேலும், எருசலேமிலிருந்த யூத அதிகாரிகள் - கைது செய்தல், சிறையில் அடைத்தல், கிறிஸ்தவர்களை கொலை செய்தல் போன்ற மிருகத்தனமான காரியங்களில் மாத்திரமே ஈடுபட்டிருந்தனர் என்பது நம்பத்தகுந்த தல்ல. அப்போஸ்தலர்களோ அவர்களுடைய முகவர்களோ இயேசு சிலுவையில் அறையப்பட்டதற்கான சூழ்நிலைகளை அறிந்திருக்கவில்லை என்று பேசித்திரிந்த போதகர்களை அனுப்பினார்கள் அல்லது உற்சாகமூட்டச் செய்தனர். அறிவு அவர்களுக்கு பிரச்சனையாக இருந்தது, கிறிஸ்துவைப் பிரசங்கித்தவர்களுக்கு எருசலேமில் என்ன நடந்தது என்றோ அது சமுதாயத்தில் புதிதாய் செல்வாக்கைப் பெற்றிருந்த ஒரு கலிலேயனின் மரணத்தில் போய் முடிந்தது என்பதோ தெரிந்திருக்கவில்லை என்றனர்.

எருசலேமிலிருந்து அனுப்பப்பட்ட யூத போதகர்கள் கிறிஸ்தவ ஊழியர்களின் செல்வாக்கைத் தடுக்க முயன்றனர், கிறிஸ்தவ செய்தியை தழுவிக் கொண்ட சிதறடிக்கப்பட்ட யூதர்கள், தாங்கள் கண்ட புதிதான சுதந்திரத்தை வெகு தொலைவுக்குக் கொண்டு செல்ல முயற்சித்தனர் என்பதும் சாத்தியமே. வல்லுனர்கள் பலஸ்தீனா மற்றும் சுற்றுப் புறங்களிலிருந்த யூதர் மார்க்கம் முற்றிலும் வெவ்வேறானவை என்பதை தெளிவுபடுத்தினர்.[4] அநேக ஜெப ஆலயங்களில் தங்களுடைய பிதாக்களின் மார்க்கம் புறஜாதிகளின் மதங்களால் ஏற்றுக்கொள்ளப்படுவதையும் அதே போல ஒழுக்கங்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதையும் கொண்டிருந்தனர். அவர்களும் கூட, எருசலேமிலிருந்த யூதர்களின் அதிகாரிகளிடமிருந்து வந்ததைக் காட்டிலும், வித்தியாசப்பட்டக் காரணங்களுக்காக, அவை அப்போஸ்தலர்களுக்கும் எருசலேமிலிருந்த சபைத் தலைமைத்துவத்துக்கும் மேற்பட்ட அறிவைத் தாங்கள் பெற்றிருந்ததாக உரிமை கொண்டாடினர். அஞ்ஞானத்தத்துவங்களை ஏற்றுக் கொண்டிருந்தவர்கள் கிறிஸ்தவப் போதகர்களின் ஊடுறுவல் அப்பொழுது சூழ்ந்திருந்த நிலையில் இன்னும் அதிகமான கண்ணோக்கத்திற்கு கதவு திறந்திருந்ததை ஒத்த உணர்வைக் கண்டனர். மற்ற காரியங்களோடு, கிறிஸ்தவ உபதேசம் இன்னும் அதிக தளர்வான ஒழுக்க விதிகளுக்குத் திறந்த கதவாக அவர்கள் கண்டனர்.

அப்போஸ்தலிக செய்தியில் ஒரு அடிப்படைக் கொள்கை குற்றச் சாட்டுக்களுக்கு தப்ப இயலாத அளவுக்கு ஏதுவாக்கக் கூடியதாயிருந்தது. இயேசு மறுபடியும் வருகிறார் என்று அப்போஸ்தலர்கள் வாக்குத்தத்தம் பண்ணினார்கள், ஆனால் அவர் வரவில்லை, யூதா தனது நிருபத்தை எழுதினார், பேதுருவும் 2 பேதுரு என்று நாம் அழைக்கும் நிருபத்தை எழுதி அப்போஸ்தலர்களின் அறிவை மறு உறுதிப்படுத்தினார், மேலும் அவருடைய உயிர்த்தெழுதலின் சாட்சிகளாக அவர்கள் இருப்பதையும் கிறிஸ்தவ செய்தியில் காணும் ஒழுக்கக் காரியங்களின் முக்கியத்துவத்தையும், கர்த்தர் வருவார் என்ற வாக்குத்தத்தங்களையும் உறுதிப்படுத்தினார் (2 பேதுரு 3:11-13). யூதாவில், கள்ளப் போதகர்கள் கர்த்தருடைய வருகையைக் குறித்து பழித்துரைத்த

வார்த்தைகள் சிறிதளவு மட்டுமே தெளிவாக்கப்பட்டுள்ளது, "ஒன்றான ஆண்டவராகிய தேவனையும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவையும் மறுதலிக்கிறவர்கள்" என்று அவர்கள் சொல்லப்பட்டாலும் தெளிவாய்க் காணப்படாதவை (யூதா 4). இது உண்மையாகையால், 2 பேதுரு, யூதா, யாக்கோபு ஆகிய புத்தகங்கள் சபையின் ஆரம்பக் காலங்களில் எழுதப்பட்டவை என்பதற்கான காரணத்தோடு கூடிய ஆலோசனை காணுகிறது, ஒருவேளை 40ம் ஆண்டுகளின் இறுதியிலோ 50ம் ஆண்டுகளின் ஆரம்பக் கட்டத்திலோ எழுதப்பட்டிருக்கலாம்.

2 பேதுருவும் யூதாவும் ஒரே விதச் சூழ்நிலைகளில் எழுதப்பட்டிருந்தால், அவைகள் ஒரே நேரத்தில் எழுதப்பட்டதாக நினைக்க சரியான காரணமுண்டு. யூதா புத்தகம் யூத வாசகர்களுக்கு யூதக் கோணத்தில் எழுதப்பட்டதாகத் தோன்றுகிறது. 2 பேதுரு நிருபம் பழங்கால கிரேக்கப் பண்பாட்டு மொழியில் அதிகமாக பயன்படுத்தப்பட்டுள்ளது, ஆனால் அதுவும் யூத சிந்தனை உலகை எடுத்துக் கொண்டுள்ளது, சிரியா/பலஸ்தீனம் ஆகிய பகுதிகளில் வாழ்ந்த அநேக யூதர்கள், முழுமையாக கிரேக்கப்பண்பாட்டு கலாச்சாரத்துக்குள் தங்களை ஆட்படுத்தியிருந்தனர். கிரேக்கப் பண்பாட்டு மொழி பேசும் கூட்டம் யூதரல்லாதவர்கள் மட்டுமே என்று பொருள் கொள்ள வேண்டிய அவசியமில்லை.

## மார்க்க எதிர்ப்பு பற்றுக் கொண்டவர்களின் குணாதிசயமும் நடத்தையும்

யூதாவின் வித்தியாசப்பட்ட தகுதியாம்ஸம் என்னவெனில் அவர் உண்மையில் எழுதினவைகளைக் காட்டிலும் ஒரு வேறுபட்ட நிருபத்தை எழுத வேண்டும் என்று மனதில் தீர்மானித்து எழுதியிருக்கிறார். திடீர் நெருக்கடியினிமித்தம் அவர் கள்ளப் போதகர்களைக் குறித்த கருத்தை எழுத வேண்டியதாயிற்று. 2 பேதுருவில், உள்ளது போலவே, கள்ளப் போதகர்கள் போதித்தவைகளைக் காட்டிலும், அவர்களுடைய குணாதிசயங்களைக் குறித்து அதிகமாகச் சொல்லப்படுகிறது. அவர்கள் துணிகரக்காரர்களும், அகந்தையுள்ளவர்களும், தங்கள் மாம்சத்தை அசுசிபடுத்துகிறவர்களுமாயிருந்தார்கள் (யூதா 16; 2 பேதுரு 2:14). அவர்கள் அநேகமாக கிருபையின் உபதேசத்தைத் தவறாகப் புரிந்து கொண்டார்கள் (யூதா 4, 12, 13; 2 பேதுரு 2:19). அவர்கள் மாம்சத்தை அசுசிப்படுத்தியதோடு மட்டுமல்ல, அப்படி அசுசிப்படுத்துதல் கிறிஸ்தவ நடக்கையில் ஏற்புடையது என்றும் அவர்கள் போதித்தனர்.

யூதாவும் பேதுருவும் தேவனுடைய நியாயத்தீர்ப்பு தேவதூதர்கள் மீதும் வரும் என்று மறைமுகமாகச் சுட்டிக் காட்டினர் (யூதா 6; 2 பேதுரு 2:4). இது சிலரை கள்ளப் போதகர்கள் தங்களைக் குறித்து மார்க்கத்துக்கு எதிரான கொள்கையுடையோரால் பரிந்துரைப்பவர்கள் என்ற முடிவுக்கு வரச் செய்துள்ளது. தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தம் செய்யும் ஜீவன்கள் மறையியல் ஞான உபதேசங்களில் முதன்மையானதாகக் கணித்தார்கள். சிலர் இவைகளை மறையியல் ஞானக் கொள்கையைக் குறிப்பிடுவதாகக் கண்டார்கள். ஆகிலும், யூத எழுத்துக்களில் நிறைந்த சாட்சியங்கள் தேவ

*தூதர்கள் மீது தேவன் கொடுக்கும் நியாயத்தீர்ப்பைக் குறித்த யூகங்களிலிருந்து காணுகின்றன. தேவ தூதர்களுக்குக் குறிப்பிடப்படும் வார்த்தைகள் தானாக மறையியல் ஞான கொள்கையின் செல்வாக்கல்ல.*

## கட்டுக்கதைகளைக் கொண்ட புத்தகங்களிலிருந்து யூதாவின் பயன்பாடு

*ஒரு வகையில் புதிய ஏற்பாட்டின் வேறெந்த ஆசிரியரைக் காட்டிலும், யூதா கிறிஸ்தவ சட்டதிட்டங்களின் தொகுப்புகளில் வராத யூதர்களின் இலக்கியத்திலிருந்து தன் தகவல்களைப் பெற்றுக் கொண்டார். ஒரு காரியம், இந்த நிருபத்தில் மிகாவேல் என்ற பிரதான தூதனுக்கும் பிசாசுக்குமிடையே மோசேயின் சரீரத்தை குறித்து தர்க்கம் நடந்த காட்சியை இந்த நிருபம் விவரிக்கிறது (வசனம் 9), இந்த நிருபம் பேசும் குற்றச் சாட்டு பழைய ஏற்பாட்டில் வேறெங்கும் விவரிக்கப்படவில்லை. ஆரம்ப கிறிஸ்தவ வட்டாரங்களில் மோசேயின் சங்கற்பம் என்றழைக்கப்பட்ட புத்தகத்தில் குறிப்பிடப்பட்டு விவரமாகப் பேசப்படுகிற சம்பவம் பரவலாக நம்பப்படுகிறது, ஆனாலும், அதிக நிச்சயமில்லாத காரியமாகவே அது இருக்கக் கூடும்.*

*மோசேயின் சங்கற்பம் எனும் புத்தக நகல் இப்பொழுது வரை எதுவும் பாதுகாக்கப்பட்டுள்ளதா என்பது எதுவும் நிச்சயமாகத் தெரியவில்லை. இதுவரை காக்கப்பட்டுள்ள ஒரு பத்திரம் மோசேயின் ஏற்பாடு மற்றும் மோசேயின் சங்கற்பம் என்று உள்ளது. காலத்தினூடே நீடித்து நிலைத்திருப்பது பத்திரத்தின் ஒரு பகுதிமட்டுமே, அந்தப் பதிவேடுகளின் எழுதப்பட்ட காலம் உறுதியாகத் தெரியவில்லை. சிலர் மெக்காபியர் ஆட்சிகாலத்தைக் குறிப்பிடுகின்றனர், மற்றவர்கள் அதைவிடத் தாமதமாக கி. பி. இரண்டாம் நூற்றாண்டைக் குறிப்பிடுகின்றனர். பாதுகாத்து வைக்கப்பட்டுள்ள பகுதி மோசே யோசுவாவுக்கு பிரியாவிடை கொடுக்கும் நிகழ்ச்சியில் கொடுக்கும் அறிவுரை இடம் பெற்றுள்ளது. அதிலே மோசே பரலோகத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதாக எந்தவிதக் குறிப்பும் இல்லை, எடுப்பு என்று ஒருவர் எதிர்பார்ப்பது போல் அங்கில்லை. நமக்குக் கிடைக்கப்பட்டுள்ள பத்திரத்தின் ஒரு பகுதியில், மிகாவேல் தூதனும் பிசாசும் மோசேயின் சரீரத்தைக் குறித்து சண்டையிட்டதாக எதுவும் இல்லை. இந்தக் கதை இப்பொழுது இருக்கும் பாகத்திற்கு அப்பால் இருந்த பக்கங்களில் இருந்து தொலைந்திருக்க வேண்டும் அல்லது யூதா முற்றிலும் காணாமல் போன ஒரு பதிவேட்டிலிருந்து குறிப்பிட்டிருக்க வேண்டும். ஆதித்திருச்சபையில் இருந்த ஆசிரியர்கள் ஒரு புத்தகத்தைக் குறிப்பிட்டு அது மோசேயின் சங்கற்பம் என்று அழைத்தனர்.[5] அவர்கள் வைத்திருந்த அந்த எழுத்துக்கள்தான் நாமும் கொண்டிருக்கிறோமா என்று தெளிவாகத் தெரியவில்லை.*

*யூதா ஒரு பதிவேட்டைத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார், அது 1 ஏனோக்கு அல்லது எத்தியோப்பிக் ஏனோக் என்பது சில ஆரம்பக் கட்ட யூத கிறிஸ்தவ வட்டாரங்களில் பரவலாகப் பயன்படுத்தப்பட்டு பெருமதிப்புக் கொடுக்கப்பட்டது என்பதற்கு சாட்சியங்கள் உண்டு. இந்த வசனப்பகுதி எத்தியோப்பிக் சபையால் முழுமையாய் எடுத்துக் கொள்ளப்பட்டு,*

*விதிமுறை சட்டமாக பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளது. எத்தியோப்பிக் மொழிக்கு அப்பால், அந்தப் பதிவேட்டின் ஒரு பகுதி கிரேக்க மற்றும் இலத்தீன மூலப்பிரதிகளில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளது, யூதா 1 ஏனோக்கு 1:9 ஐ மேற்கோள் காட்டினார். ஏனோக்கு என்பது கலப்பான வேலையாக ஏனோக்கால் எழுதப்பட்டதாக முன்வைக்கிறது, இந்த ஏனோக்கு ஆதாமுக்கு ஏழாம் தலைமுறை. இது ஒரு கலப்பட பணி, இதன் ஆதி துவக்கப்பகுதி ஏறத்தாழ கி. மு 170ல் எழுதப்பட்டது. அதன் பின் பகுதிகள் கிறிஸ்துவுக்குப் பிற்பாடு எழுதப்பட்டது. மற்ற பகுதிகளோடு, இந்த எழுத்துப்பணி, யூதர்களின் வரலாறாக எழுதப்பட்டது, தேவன் கொடுக்கப் போகிற நியாயதீர்ப்புக் குறித்து ஒரு மிகப்பெரிய அளவில் பேசப்படுகிற ஒரு தேவனுடைய வெளிப்பாட்டுப் புத்தகம். (யூதா ஏனோக்கை மேற்கோள் காட்டி மிக விளக்கமாக பயன்படுத்துகிறதை மேலும் அறிய வசனம் 14, 15 ற்கான விளக்கவுரையைக் காண்க.)*

---

**குறிப்புகள்**

[1]*காண்க* J. N. D. Kelly, *A Commentary on the Epistles of Peter and Jude*, Black's New Testament Commentaries (London: Adam & Charles Black, 1969), 227. Kelly stated that "the priority of Jude is all but unanimously accepted today." [2]*காண்க* Richard J. Bauckham, "Jude, Epistle of," in *The Anchor Bible Dictionary*, ed. David Noel Freedman (New York: Doubleday, 1992), 3:1102. Bauckham suggested that the first readers of Jude were Jewish Christians living in a Gentile environment. [3]*காண்க* John H. Elliot, "Peter, Second Epistle of," in *The Anchor Bible Dictionary*, ed. David Noel Freedman (New York: Doubleday, 1992), 5:287. Elliot argued that the first readers of 2 Peter lived "in a culturally pluralistic Hellenistic environment." [4]Consider, for example, the diversity of documents examined by Leonhard Rost, Juda*ism Outside the Hebrew Canon, tr*ans. David E. Green (Nashville: Abingdon, 1971). [5]Kelly listed Clement of Alexandria, Origen, and others. (Kelly, 265.)

# புத்தக சாராம்ஸக் குறிப்புகள்

I. வாழ்த்துரை: அழைக்கப்பட்டவர்களுக்கு (வசனங்கள் 1, 2).

II. நிருபத்தின் நோக்கத்தை விளக்கப்படுத்துதல் (வசனங்கள் 3, 4).
  A. விசுவாசத்திற்காக தைரியமாய்ப் போராடுதல் (வசனம் 3).
  B. சபைக்குள் கள்ளப் போதகர்கள் நுழைதல் (வசனம் 4).

III. கள்ளப் போதகர்களுக்கு கண்டனம் (வசனங்கள் 5-16).
  A. கீழ்ப்படியாதவர்களுக்கு தேவனுடைய ஆக்கினைத்தீர்ப்பு (வசனங்கள் 5-7).
    1. அவிசுவாசமாயிருந்த இஸ்ரவேலர்கள் (வசனம் 5).
    2. பாவஞ்செய்த தூதர்கள் (வசனம் 6)
    3. கெட்ட நடக்கைகளையுடைய ஒழுங்கீனமான சோதோம் கொமோரா (வசனம் 7).
  B. கள்ளப் போதகர்களைக் குறித்த ஒரு விளக்கம் (வசனங்கள் 8-13)
    1. அதிகாரத்தை புறக்கணித்தல் (வசனங்கள் 8-10)
    2. தேவனுடைய நியாயத்தீர்ப்பின் கீழ் (வசனம் 11)
      a. “காயீனின் வழி”
      b. “பிலேயாமின் வஞ்சகம்”
      c. “கோராவின் எதிர்ப்பு”
    3. சுயநலம், கனியற்ற தன்மை, மற்றும் ஒழுக்கமின்மை (வசனங்கள் 12, 13)
      a. “கறைகள்”
      b. “தண்ணீரற்ற மேகங்கள்”
      c. “கனியற்ற செத்துப்போன மரங்கள்”
      d. “நுரைதள்ளுகிற அமளியான கடலலைகள்”
      e. “மார்க்கந்தப்பி அலைகிற நட்சத்திரங்கள்”
  C. அவபக்தியான மனிதர்கள் மீது வரும் நியாயத்தீர்ப்புக் குறித்த ஏனோக்கின் தீர்க்க தரிசனம் (வசனங்கள் 14-16)

IV. ஒரு வித்தியாசம்: பிரிவினைவாத பரியாசக்காரர்களும் உண்மையுள்ள விசுவாசிகளும் (வசனங்கள் 17-23)
  A. பிரிவினைவாத பரியாசக்காரர்களுக்கு எதிரான எச்சரிக்கை (வசனங்கள் 17-19).
    1. அப்போஸ்தலரின் எச்சரிக்கை (வசனங்கள் 17, 18)
    2. இந்த மனுஷர்களைக் குறித்த விளக்கம் (வசனம் 19)
      a. “பிரிந்து போகிறவர்கள்”
      b. “ஜென்ம சுபாவத்தார்”
      c. “ஆவியில்லாதவர்கள்”
  B. உண்மையுள்ள விசுவாசிகளுக்கு சில அறிவுரைகள் (வசனங்கள் 20-23)
    1. உங்களை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள் (வசனங்கள் 20, 21)
      a. “பரிசுத்த ஆவிக்குள் ஜெபித்தல்”
      b. “தேவனுடைய அன்பிலே காத்துக்கொள்ளுதல்”
      c. “கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய இரக்கத்தைப் பெறக் காத்திருத்தல்”
    2. சிலருக்கு இரக்கம் பாராட்டி சிலரை அக்கினியிலிருந்து இழுத்து விடுதல் (வசனங்கள் 22, 23)

V. முடிவுரையுடன் கூடிய வாழ்த்துக்கள் (வசனங்கள் 24, 25)